கிளாலி
சந்தியோகுமையோர்

# தேர்ப் பவனிப் பாடல்கள்



அஞ்சலித்து அர்ப்பணித்தோம்.

கடலோரக் காடாக மண்டிக்கிடந்த கிளாலி மண்ணை
அருள்வளமும், பொருள்வளமும், பொலியவைத்து
சமூக - விவசாய - பொரளாதார - கலை - பண்பாட்டு
விழுமியங்களை வளரவைத்து - மலரவைத்து
ஒளிரவைத்து - உயரவைத்து
உடல் கிளாலி மண்ணுக்கும்
உயிர் கிளாலி மண்ணின் உயர்வுக்கும் ஈந்து
மக்களின் மனங்களில் ஆழப் பதிந்து
நீங்காது நிலைத்து நிற்கும்
கிராம விதானையார்
வஸ்தியாம்பிள்ளை வரப்பிரகாசம் அவர்களுக்கு
"கிளாலி சந்தியோகுமையோர் தேர்ப்பவனிப் பாடல்கள்" என்னும்
இந்த இசைப்பேழையை சமர்ப்பணம் செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியவர்

திரு. பே. யேசுதாசன்

பக்கப்பாட்டு

சந்தியோகுமையோர் இசைக்குழுவினர்

**ஆர்மோனியம்**

திரு. செ. மைக்கல்

**மிருதங்கம்**

திரு. தி. செல்வம்

**உரை**

திரு. யோ. யோண்சன் றாஜ்குமார்

**ஒலிப்பதிவு**

திரு. முரளி (ஸப்தமி கலையகம்)

**கருத்து - இயக்கம்**

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

## கவி

01. சீர்தங்கு வாணவெடி மேவியே எத்திசையும் திடுதிடு
வென்றிசைகள் ஆர்ப்ப செப்பரிய மத்தாப்பு நற்பெரிய
பகல் வெற்றி சேனாடு போலொலிக்க நேர்தங்கு
சுகிர்த சங்கீத இசைபாடியே பேணியேசிலர் வியப்ப
பேசரிய எங்காள மத்தாள கைத்தாளம் பேரிசை
முழங்க ஆர்ப்ப

நேர்தங்கு செபமாலை அணி
அணியாய் சகலலுரும் நேரிசைபாடி நிற்க
நேசமுறுகுருக்களும் திருப்பலி செலுத்தியே
ஏகபரனைத் துதிக்க பார்தங்கு கிளாலி எனும்
ஊர்தங்கு சந்தியோகுமையோர் பளபளென
ரதமீதிலே பகலரிய பிரகாசமாய் ஒலிமேவி
வருகிறார் பாதம் பணிந்து வணங்குவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவனித் தரு 1

02. பவனியைப்பாரும் சந்யோகுவாற பவனியைப்பாரும்
பவனிபாரும் சிட்டரதமேல் எழுந்து சிட்டன்
பரிந்து எமக்காய் ஆசி புரிந்து
சொரிந்து வாற பவனி....

சித்திரத்தினலிழைத்த மாடமோ அழகொழி
இரத்தனலிழைத்த பாடமோ நல்ல
முத்தினத்தினாலிழைத்த கூடமோ அல்லால்
வித்தை யென்ன வெறு சொல்லலாகுமோ
வெகுநய வெய்யவனின் ஒளியென்ன
தூய சந்தியோகுவாறார்
மெய்யதாக மனுவோர்கள் அய்யனைப்
பணிந்து போற்ற பவனி....

முத்தையொத்த பட்டுக் குடைவிரியவும் முகில்
அத்தையொத்த சித்ரக்கொடி திரியவும் நல்ல
மெத்து வேலைகள் சித்ரவட்டம் சொரியவும் ஒலி
வைத்திழைத்த பூங்கமுகு விரியவும் துதி
கொழும் இத்தலத்தவர்புகழ எத்தலத் தவர்மகிழ
எங்கும்தயை பொங்கும் திருச்
சந்தியோ கெழுந்துவாற பவனி....

தத்துமி தத்துமியெனத் தாளமும் தகசெணு
தித்துமி தித்துமியென மேளமும் அதிரொலி
இட்டிடு எக்காளமுற்ர நாதமும் பெரும்
சத்தராகமிட்டசுரகீதமும் தகசெணுதத்துமி
தத்துமியென மத்தளம் கைத்தாளம் போட
துங்கநாத சுரம் ஊதச்சந்தியோ கெளுந்துவாற பவனி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவனித் தரு - 2

03. சித்திரப்பவனி பாரீர் சந்யோகுவாற
சித்திரப் பவனி பாரீர்
சித்திரப் பவனி சந்யோசித்திரணி தவமுத்து
இரத்தினத் தேரினில் இராச
தத்துவத் துடனேவாற சித்தி....

அன்பக செண்பக சண்பக மலர்வாசன் அதி
குணநேசன் அதி மதுராசன் அவர்
மருதாடக் கிளி பாடமயில் லாடகுயில்
கூவ காலங்கிர்தமானசுந்தர மோன
மொற்சுடர் பாதபங்கயர் சேயீந்திடு
பாக்கியன் சந்யோகுவாறா சித்தி....

பூரத்திடு ஆரத்தொலிபலர் போட
செம்பொன் மணிநீட தாம்பூர்தவில் போட
நற்பூம் கமுகாடக் கொடியாடக்
குடையாடசனர் கூவ இரந்தவர் பதம்
மகிழ்ந்தடியவர் தினம் துதி பெற
சேனுலாவிய தங்க மாரத மீதிலே
சந்யோகுவாற சித்தி....

நித்திலத் தொடு பச்சை இரத்தினத்தொளி
தங்க நிறை கதிர் தங்க மணியேதுங்க
தலமிசை வருதூயன் ஜெயநேயன்
செறிபாகன் கதிர்முகன் ஜெயம்
ஜெயமென சீரிலுற்றிடு கிளாலி மாநகர்
செழித்திலங்கிட மேவியேசந்யோகுவாற சித்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிசுதன் - கவி

04. ஆதிசுதன் உதவியொடு திவ்விய சம்மனசினோர்
அச்சித்து நிற்பதொருபால்
அம்பலத் தே தகுமே சங்கும் அப்போஸ்
தலர்கள் அக்களித்திடுவ தொரு பால்
நாதனோடு கன்னிபதினோராயிரம் பேர்கள்
நமஸ்கரித்திடுவ தொருபால் நாற்பதொடு
நாற்பதில் எட்டுக் குறைந்த சீடர்கள்
நற்பூசை காண்பதொருபால்

வேதமுறும் மானர்கிளை மங்களம்
சொல்லியே மேன்மை கொண்டாட
வொருபால் மெய்யான விதசுதக்குருக்கள்மார்
நற்பூசையில் விதம் சொல்லி நிற்பதொருபால்
சோதிரிமாமணிகள் தாவி ஒளிமேவிடச்
சிட்டசந்யோகுமை யோர் துங்க நவ மேபுரியத்
தங்க ரதமேறினார் துதி புரிந்திறைஞ்சுவோமே.

## எங்கும் புகழ்ப்புகழுடன் - தரு

05. எங்கும் புகழப்புகளுடன் இங்கும் புகழப்
புகழ்பெறு சங்கம் பரகதியெனவே அங்கும்
புகழ ஆரும் மகிழ மகிழ்வுடன் ஊரும்
மகிழ நயமுறு வோரும் மகிழப் புரவலர்
தானும் மகிழவே அமலசீலன் சந்யோகென்னும்
பெருமை கோலன் ஒய்யார அழகொளிரும்
நவமணிகள் அணிரத மேல் வருவது பார்
ஆரும் நேரும் வருவோரும் துதி செய்ய
பேரும் கிளாலி இவ்வூரும் மதி செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கும் தளிர் கொடி குடைகளும்
எங்கும் விரிய ஒளிமிகு பொங்கும்
மணிரத பிரபைகள் இங்கும் சொரிய
சங்கம் புகழ் கவிவாணர்கள் பொங்கம்
புரியத் தவில் முர செங்கும் அதிரொலி
யெனவே நின்றிங்கிரைய தருமசீலன் சந்யோ
கென்னும் பெருமை கோலன் எல்லோக்கும்
அருள்மழையை பொழிமுகிலாய் அணி ரதமேல்
வருவதுபார் அத்தன் சுத்தன் திருக்கத்தனின்
சீஷனாய் இத்தலத்தேயுன் இரக்கமதே செய்யும்

பங்கம் பரி சோனர்களும் எங்கும் திரிய
மிகுதிறல் மங்கும் தொம் றம்யல்கு
நிந்தம் புரிய வந்தங்கவர் படைதனிலே
நின்றங்கமர் செய்ய எங்கும் புகழ் தளபதியெனக்
கண்டங்கவர் உய்ய பரியில் வந்தாய்
சோனர் நெஞ்சம் வெருவநைதாய் அப்போது
பகைவரெனும் தரியவர்கள் பழுதுபடப் பொருதிடவே
பாரும் பறங்கிகள் ஊரும் மகிழ்ந்திட பேரும்
மையோரென்றெல்லோரும் புகழ்ந்திட

தங்கம் புரி சுருவமுடன் வந்தங்கவர் சேரமுன்
பங்கம்புரி மதுபகிர்வோன் சங்கந்தனிலேறி
எங்கும் புகழ் அரசனுமே கொண்டங்கனல் மீறி
நின்றங்கவர் சிறுமகனை நன்றங்கருவேற்ற
தந்தை நொந்து உன் பதியில் வந்து
நொந்து வானோனும் தகதகன உனது
மகன் உயிருடனே இருப்பனென தாவியே
கோணும் எல்லோருமே போய்ப்பார்க்க
போகிய முப்பத்தாறாம் நாள் உயித்தனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மையோர் வாறாரோ - தரு

06. மையோர் வாறாரே ரதத்தினில் மையோர்
எனும் தவத்தன் மெய்யாய் வெண்பரியேறி
செய்ய அருள்மழையை பெய்யச் சந்யோகு
மையோர்

எண்ணளவற்ற எளியோர் தன்னை
காக்கும் தூயன் எங்கள் நம்பிக்கை விசுவாசம்
நிறைந்த போசன் பன்னரும் பாவ வினையை
மாற்றும் பரமவாசன் பாரோர்துதி கொள்ள
ரதமீதில் சந்யோகு மையோர்

கூனர் குருடு அங்கவீனர் செவிடர் ஊமர்
ஆனோர்க்கருள் புரியத்தானே திவ்விய
நேசன் வானோர்கள் அணிந்து செல்ல
மானோர்கள் பணிந்து தொழ வாறார்
ரதமீதில் ஏறி பாராய் சந்யோகு மையோர்

பஞ்சம் படை கொள்ளை நோய் பங்கம்
எனவே தாள பாரில் பாசா சகன்று கூவிப்
புலம்பி அழ தஞ்சபாதம் நான் துதித்து
கவிவாணர் நின்று பாட கத்தனை துதித்து
பரிசுத்தனாம் சந்யோகு மையாார்

## ஆதிபரநாதனின் - கவி

07. ஆதிபரநாதனின் அன்பான சுதனுக்கு அரிய
நற்சீசனாய் அம்பரம் தனிலே எம்பரம
நாதனுக்கரு காசனத்திலுற்றாய் சோதியென
றம்யலின் சோர்வதைக் கண்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலுக்கரின் திறத்தை வெல்ல சொல்லரிய
வேகமாய் வல்லபரியேறியே
தொடுத்திடும் போரரை வென்றாய்

உற்றாதியென கூம்பல் நகர் ஆள்
மன்னனுக்காக நின் கருணை தான் புரிந்தீர்
நின்நிலத் தரசனால் வதை செய்த
சிறுவனை நீ உயிர்ப்பித்து விட்டாய்
பாதிமதி ஏறிவரும் மாமரியின் புதல்வனை
பரிந்தெமக்காக வேண்டி பங்கமது
காணுகிடா தெந்தனையும் காத்திடும்
சந்த சந்தியோகுவே

## தந்தையே ஆசீர்வாதம் - தரு

08. தந்தையே ஆசீர்வாதம் அடியோருக்கு
இத்தரை மீதினில் தாரும் ஐயனே சிந்தை
கலங்கியே நொந்து வருந்தியே மைந்தரெம்
மேலிரங்கி அருள் சுரங்கி மிக இரங்கி மையாரே

பாவிகட்காக நீரும் அன்றாடு பரனிடத்தில்
நீர் மன்றாடும் ஐயனே பாவ அலகை செய்
மோசவினைகளை பற்றமாற்றிடுவாய்
பரிந்தெமக்காய் பரனிரங்க மையோரே

பண்டு படைபொருதும் பறங்கிகட்கன்று
உதவி செய்தாய் மையோரே
பாதகராம் அந்த சோனர்கள் நைதிட
பாரதனில் வந்தாய் பரியில் நின்றாய்
அமர்புரிந்தாய் மையோரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியே முப்பத்தாறாம் நாளையில் மரித்தவனை
உயிர்க்கச் செய்தாய் நீ சிந்தை கலங்கியே
நொந்து வருந்திடும் தந்தை தாய்க்குக் கொடுத்தாய்
அருள்துடைத்தாய் குறைவிடுத்தாய் மையோரே

## பாரோர் புகழ் சந்தியோகே - தரு

09. பாரோர் புகழ் சந்தியோகே சந்தியோகே
எம்மைப் பாராய் அருள் மிகத் தாராய்
பாவி அனல் கொண்டிடு நரகம்தனில் சூழல் வண்டு
போல் விழ முந்தியே அப்பனே உன்னருள்
தஞ்சம் எனக்கிப்போது தந்திடு கொஞ்சம்

சத்துருவான ஏர்மோசை மிகுதூசை
சணம் கட்டிவா என்று நீர் ஓத அந்தத்
தருணந்தனில் விசமண்டிடு கலகங்களும்
அலைகளும் கட்டியே உன்வசம் சேர்க்க
நீரும் உத்தமனாகக்கை ஏற்க.

பண்டுபடை செய்பறங்கி மிக அஞ்சி மனம்
நொந்து உமைவேண்டிக் கெஞ்ச
வெகுபழுதுண்டிட அழல் கொண்டுமே
அரசன் படை அதை வென்ற நீர் அப்பனே
எம்மை நீர் ஏரும் உந்தன் கத்தனை
வேண்டிநீர்காரும்
பஞ்சம்படை வினை நீக்கி எம்மை தூக்கி
உந்தன் தஞ்சம் தனையும் உண்டாக்கி
உந்தன் பாதமேவிட உனதாசையை
தருவாய் நிதம் கொழுதேனடி
பன்னிரு சீசர்க்கு முன்னோன் பின்னும்
இந்நில மீதோர்க்கு நன்னோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தமுறு கலிலேயா

10. கந்தமுறு கலிலேயா முந்துகடலோரத்தில்
கத்தனுரை கேட்டவுடனே கனநேசர்
தந்தை தாய் இன நேசர் பொருளெல்லாம்
கனமோசம் என்றுவிட்டு வந்தகுரு
நாதனின் தொன்று மிக நன்றென்று
வாவென்று தம்பி கூட வானுறைய
மனிதர்களை நீபிடித்திடு என்றவாக்கு
அதை நோக்கமுடனே பிந்தாது யூதேயா
சமாரியா கலிலேயா பிசகிலா எஸ்பானியா
பிள்ளைகளை நல்ல மறை சொல்லு
நாதன் உரைபோல் பூரண வழிகாட்டி நீர்
வந்தெமது நொந்தபிணி பந்தவினை மாறவே வரமது
புரந்தருளுவீர் வாலியொரு காலியுரை
சாலைவளர் கிளாலி நகர் வந்த சந்தியோகுவே

## பாவியைக் காண்பாரும் ...

11. பாவியைக் காண்பாரும் நீரையா நீர் பார்த்து
எந்தன் பங்கம் அகற்றுவீரையா
ஆவிக்குதவி வெய்யும் ஐயா சந்தியோகுவே
அருள் மேவிய பதிதனில் வந்தேன்
தவமேவிய உனதடி கண்டேன்

ஏகன் உதவி கொண்டோனே பொய் வேடம்
கொண்ட ஏர்மோசனையே வென்றோனே
பேயன் புரியும் அந்த பொல்லாத புத்தகத்தை
பித்து நதி இட்டு எறிந்திடு சிட்ட
சந்தியோகுமையோரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியேமுப்பத்தாறு நாளில் மரித்தவனை
தந்தை தாயார்க்கு ஈந்தோனே பிந்தாது
எந்தனையும் பேணி ரட்சித்தருளும்
பிழை செய்திடு பாவியென்றென்னை
தவஞானி தள்ளாமலே காரும்

பாவ விசத்தை வென்றோனே
மறைவிரித்து பரகதி வழி
சென்றோனே தாவும் அடியவரை
தற்காக்க வேண்டும் என்று
தவஞானியாய் ரதமதிலே வருதிருமேவு
சந்யோகு மையோரே

## அன்னை நீ - கவி

12. அன்னை நீ தந்தை நீ உன்னை விட
வேறொருவர் என(ம)க்கு இல்லை அன்பாகவே
எம்மை ஆதரித்துக் காத்திட தாய் தந்தை
எவருமில்லை அலகையின் சோதனைகள்
நோய்பிணியின் வேதனைகள் எம்வாழ்வில்
தாங்கிடக் கூடுதில்லை வருடங்கள் பல
ஆகியும் நானுண்ட ஔசதங்களால் வந்த
பிணி மாறவில்லை நற்தயவதான நீஏழ்மை
பணிவான நீ ஞானமது நல்குவதும் நீ
நானாவிதக் கவலைகள் தீர்ப்பதுவும் நீ உனை
நம்பினோம் கைவிடாதே சற்றிரக்கத்தயவு
வைத்தே எமைக்காரும் உன்பரனை நீ
இரந்து உயர்வான நற்கிளாலிப்பதியான
சேமமதில் உதவு சந்யோகு முனியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தமேயுறை விந்தைசேர்

13. கந்தமேயுறை விந்தைசேர் ஆலய
காட்சியின் மாட்சியைப் பாரும்
இந்த நாற்றிசை எங்குமே கூரும்
அந்த கலிலை வாசனாம் இலகு
சபதேயு புதல்வனாய் வரு
அமலசீசனாம் காரணண் யாக்கோவான
சந்யோகுவால் கருணை சொரி
கிளாலி ஈதே தேவ அருளே
உறைபதி ஈதே
சிந்தை மேவிய சந்யோகெழுந் திட்ட
சித்ரமணி ரதம் பாரும் அதில் மொய்த்
திடடிமணித்தேரும் இந்த சித்திரத்தினில்
மெத்து உத்தம ரத்தினங்களை
ஒத்து நத்திடும் பேருறும் சந்ரன்
பேணி உறைந்ததோர் பேரழகான
தைப்பாரும் ரத சீரழகானதைக் கூரும்

வந்துமாநகர் சிந்தை கசிந்திட வாழ்த்துச் செபம்
தினம் ஓதி தங்கள் தாழ்ச்சிக்குறைகட்கு நீதி
இன்று தாருமென்றுமே பாரில் வின்றிடு ஓல
மன்றிடு வானமென்றிடு தற்பரன் தனக்
கொப்புறு சந்தியோகு சகலற்கும் திரு நன்மை வேண்டி
பொல்லாக் கலகத்தின் அலகையைத் தாண்டி
அங்கவீனர் பேய்ப்பந்தமுறு வோர்கள் அன்னை
தந்தையை என்று தாள அவர் கன்ம வினைகளும்
மாள நம்மை ஆக்குவார் துயர் போக்குவார்
மனம் தாக்கமாய்மனம் நோக்குவோர்களை
அண்டினோர் பெரும் தொண்டர் சந்யோகுவால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனியில் இகசுகம் ஆவார் தேவபவனியில்
இகசுகம் ஈவார்.

எந்த நாளிலும் சந்தியோகு மையோர்
எங்களுக்கே உபகாரன் கலிலை தங்கிய
சீரின் உல்லாசன் நாளும் சிந்தை நொந்துமே
வந்த பேர்களில் அந்தரங்கனை முந்தி
நீங்கிடும் செம்பொன்மாமணி சூடிய நாயக
யேசுவின் சோதிப்பிரதாபன் அவர் சாற்றும்
பிரதாப நேயன்.

## சீரிலங்கு செபதேயு - தரு

14. சீரிலங்கு செபதேயு தந்த திருச் சந்தியோகே
திவ்விய யேசின் திவ்விய யேசின்
சீசனாகப் பாரில் இலங்கச் சுவிசேசம் சொல்லி
பண்டு எரிமோசையில்
பங்கம் விடுபசாசை பதைக்க வைத்தாய்
அவன் அஞ்ச அவன் அஞ்ச அழுது மிகக்
கெஞ்ச அருள் புரிந்த சந்தியோகே

பாவி நாங்கள் பரதேசியானோம் உம்மை
பார்த்துக் கூவுகிறோம் எம்மை
பாதுகாரும் அருள் தாரும் காரும்
வாரும் சந்தியோகே.

பஞ்சம் படை கொள்ளை நோய்
எங்கள் மேல் வராது பரனை வேண்டி
இந்தப்பாரில் உமது ஆசீர்வாதம்
தாரும் காரும் சந்தியோகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமகன் யக்கோபு

**தொகையறா**

15. தேரேறிப் பவனிவரும் தெய்வமகன் யாக்கோபு
தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பாய் இப்போது.....

தேரேறி வருகின்றார் யாகப்பராம்
வெண்புரவி மீதேறி வருகிறார் யாகப்பராம் இவர்
தீராத வினையெல்லாம் தீர்த்து எம்மைக்காத்திடவே- 2
தேரேறி அப்பன் தேரேறி தங்கத் தேரேறி
வருகிறார் யாகப்பராம்

சீரோங்கும் கிளாலி நகர் பேரோங்கும் பதிதனிலே - 2
தேரில் கொலுவிருந்து நேரில் வரும் காட்சி பாராய்
(தேரேறி)

I

உந்தன் பதி இருந்தவர்க்கு இத்தக்கதிதானோ என்று
ஓடோடி நாடி வந்தோம் அருள் மழை பொழியுமையா
போரில் இருந்து எம்மைக் காத்திட்ட மாவீரர் - 2
ஐயா, ஐயா.....
போரில் இருந்து எம்மைக் காத்திட்ட மாவீரா.....
நாடி வந்தோம் உம்பதிக்கு கோடி அருள்பொழியுமையா
(தேரேறி)

II

பஞ்சம் படை கொள்ளை நோய் வந்தபோது
தஞ்சம் என நீர் எம்மை கண்கொண்டு பாருமையா
அஞ்சி அஞ்சி நாம் வாழ்ந்த அவலங்கள் போதுமையா-2
கெஞ்சிவந்தோம் உந்தனிடம் தஞ்சம் இனிதாருமையா
(தேரேறி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III

வளம் தந்து வயல் வெளியில் உலா வந்த உந்தனுக்கு
களம் ஒன்று நாம் அமைக்க கருணை காட்டுமையா
கோடியாய் புதுமைகள் பொழிகின்ற புனிதரே
வாடுகின்ற மாந்தர் எம்மை
உம் அருளால் நிரப்புமையா

(தேரேறி)

## தேடரிய நன்மை - கவி

16. தேடரிய நன்மை சமுத்திர சம்பூரண திரிபுவன
இராசேஸ்வரியே செப்புக கருணாகதி ஒப்பில்லா
எமதரிய செல்வியே மரியதாயே பீடையுறு
பிரலாபமாக எளியோர் அழுது பெருமூச்செறிந்து
மண்ணில் பிறையுலகு சரணமதில் அபயமது
விண்டு பேசு விண்ணப்பமது கேள்

வாடை நீர் கணசாய்த்து மங்குலகில் ஓடியே
வாரியில் புனலை அற்றி மேகமதில் மின்னியே
சோனை மழை பெய்ய உன்மனம் இரங்காததேனோ
கோடி குறைகண்டாலும் ஏனை
அடியோர் செய்த குற்றங்களைப் பொறுத்து
வாரியோரிடந்தடர் மாரிபெய்ய அருள்
கூரும் புனித ஆரோக்ய மரியதாயே

## போற்றி செய்தேனே - தரு

17. போற்றி செய்தேனே தினம் தினம் போற்றி செய்தேனே ஐயனே
போற்றி செய்தேன் இந்த நாற்றிசை ஏகிடும்
பூரண சந்யோகு ஆரணன் பாதத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றரும் மோட்ச சமநிலை ஆனோரே
சரணம் சரணம் சரணம் செய்தேன் தினம்

தந்தை அன்னையினம் பந்து பொருள் நீயே
தற்பரனா ராசி பெற்றவளும் நீயே வந்தென் மனமதில்
தந்தென் வசமதில் வாரும்
வாரும் தாரும் உந்தன் தயை.

பாலப்புனலில் நான் பட்டு உலராமல்
வந்த பசாசென்னை தொந்தரரை செய்யாமல்
தேவுக்குகந்த மையோரே தினம் தினம்
தெண்டம் தெண்டம் தெண்டம் உந்தன்
அருள் தாரும்

மாய்கை என்னும் உலகாசையிலே மனம்
மாண்டு கொண்டேன் நானும் மீண்டும் தேவைத் தொழ
தூய ஆசீர்வாதம் தாவி என் மீதினில் துணைநீ துணைநீ துணைநீ
வருவாய் சந்தியோகுவே.

## போற்றி போற்றி போற்றியே - தரு

18. போற்றி போற்றி போற்றியே
நித்திய துத்தியமும் போற்றியே
போற்றி மரியாளுக்கும் புகழ் சம்மனசோருக்கும்
சாற்றும் மோட்ச வாளர்க்கும்
சகல சுத்தவாளர்க்கும்

கத்தனைத் தொழு சீலனே கதித்த அனுகூலனே
வித்தகக் கிருபை கோலனே மெய்யாய்
செபதேயு பாலனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பரன் தன் நேயனே சந்யோகு என்னும்
தூயோனே அற்புதசகாயனே அய்யா
துய்யா என் நாயனே.

பூவினோர்கள் பாக்கியமே மெய்யான
வேதவாக்கியமே தாவினோர் கலாக்யமே
தந்தாளுன் தேவாரோக்கியமே
மந்ரவானோர் கீதமே மனோர்க் கிரங்கும்
நித்தமே சந்தவின் பொற்பாதமே
தந்தாளுன் ஆசீர்வாதமே

## வம்பிட்ட கூளி

19. வம்பிட்ட கூளி செய்யும் மாயம் எல்லா கெட்டழிய
வயங்கு சோதி செங்குருதி உதிரம் சிந்த நின்ற சிரத்தோன்
உம்மை தினம் கொண்டாடி நம்பிய அடியவரை
காத்தருளும் சிட்ட சந்யோகு நவத்தோன் உம்மை
கும்பிட்டோம் இருக்காலும் கும்பிட்டோம் முக்காலும்
கும்பிட்டோம் கும்பிட்டோம்.

## அர்ச்சேஷ்ட சந்தியோகு மையோரே.

20. அர்ச்சேஷ்ட சந்தியோகுமையோரே
எங்கள் காவலரே உம்பாதம் வருகின்றோம்
எங்கள் புனிதரே அருளைத் தாரும்
எங்கள் துயரம் தீர்க்க வாரும்
கவலை இல்லையே எமக்கு கவலை இல்லையே
(அர்ச்சேஷ்ட)

I

மருதநிலம் தனிலே வீற்றிருந்து
புதுமைகள் பலவும் செய்தீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழும் கோடி மக்களுக்கு துணையாளனாய்
கவலை போக்கியே கருணை காட்டினீர்
நீரே எம் புனிதர் நீரே
நீரே எம் காவலர் நீரே 2 (அர்ச்சேஷ்ட)

II

அழுதோடி வருவோர்க்கு அன்பாளனாய்
அரவணைத்து எம்மைக்காத்தீரே
மனங்களின் சுமைகள் குறைந்திடவே
உம் மலர்ப்பாதம் நாடியே வந்தோமையா
நீரே எம் புனிதர் நீரே
நீரே எம் காவலர் நீரே (அர்ச்சேஷ்ட)

## சந்தியோகு மையோரே.....

21. சந்தியோகுமையோரே உமது புகழ் பாடி துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம் II

I

கவலையினால் மனம் வருந்தும் ஏழைகளின்
கண்ணீரை கனிவுடன் துடைத்தீரே
உலகினில் உம்மை நம்பிடுவோரை
அன்புடன் என்றும் அணைத்தீரே - 2
(சந்தியோகு......)

இறைமகன் இயேசுவை நேசித்த தினமும்
தியாகங்கள் பலவும் செய்தீரே
சத்திய வேதம் மலர்ந்திடச் செய்த
திருமறையே என்றும் வாழியவே - 2
(சந்தியோகு......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தஞ்சமே சந்தியோகுமையோரே

22. எங்கள் தஞ்சமே சந்தியோகுமையோரே
அல்லல் நீக்கி அடியோர் எம்மை ஆதரிப்பீரே

I

இன்னல் சூளும் இவ்வுலகில் ஏழைகள் நாம் வாடினோம்(2)
உம் அருளைத் தேடிவந்தோம் உம்பதமே நாடினோம் (2)
மல்லிகை றோஸ் முல்லையோடு மைந்தரையும் சூட்டினோம் (2)
நல்ல தமிழ் பாக்களாலே வெற்றிக் கொடி நாட்டினோம் (2)
ஆயனும் சகாயனும் மறைஞான போதனும் (2)
ஆயராம் துலுக்கர் படை நாசகாரர் ஆக்கினார் (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org